# 18 மரங்கள் வாழ்க! மாநிலம் வாழ்க!

மரஞ்செடி கொடியால் மண்ணில் வாழ்வு
  மனிதர்கள் இதனை உணர்வது அறிவு
அறஞ்செயல் நல்ல மரம்செடி வளர்ப்பு
  அனைவரும் இதனை உணர்வது சிறப்பு

உடுத்தும் ஆடை தருவது எதுவோ?
  உண்ணும் உணவுகள் தருவது எதுவோ?
படுக்கும் பாய்கள் தருவது எதுவோ?
  பலவகை மரங்கள் செடிகொடி அன்றோ?

அரிசியும் பருப்பும் கொடுப்பது எதுவோ?
  அறுசுவை உண்டி அளிப்பது எதுவோ?
தரணியில் வாழ நற்றுணை எதுவோ?
  தருக்களும் செடிகளும் கொடிகளும் அன்றோ!

மாங்காய் தேங்காய் கொடுப்பது எதுவோ?
  மதுரக் கனிகள் கொடுப்பது எதுவோ?
நீங்காது நம்மைக் காப்பது எதுவோ?
  நிழல்தரு மரங்கள் செடிகொடி அன்றோ?

வாழ்க மரங்கள் செடிகொடி வாழ்க!
  வானம் பொழிந்து மாநிலம் வாழ்க!
தாழ்வில்லாத தருமம் வாழ்க!
  தானமும் தவமும் தழைத்து வாழ்க!

**பரலி சு. நெல்லையப்பர்**

குறிப்புரை:

பரலி சு. நெல்லையப்பர் பாரதியாரின் புகழை உலகறியச் செய்தவர். அவர் பாரதியாரால் ‘தம்பி’ என அழைக்கப்பெற்றவர். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் பாரதியாரின் பாடல்களைத் துணிவுடன் நூலாக வெளியிட்டுப் பரப்பியவர். வ.உ. சிதம்பரனார் நிறுவிய சுதேசிக் கப்பல் நிறுவனத்தில் பணியாற்றியவர். 1908 இல் சிதம்பரனாருடன்சிறை சென்றவர். புதுச்சேரியில் ‘சூரியோதயம்’, ‘இந்தியா’, ‘விஜயா’, ‘கர்மயோகி’ எனும் இதழ்களில் பாரதி யாருடன் சேர்ந்து பணியாற்றியவர்.

## அருஞ்சொற்பொருள் விளக்கம்

**மண்ணில்** - உலகில், **உணர்வது** - தெரிந்துகொள்வது, **அறுசுவை** - ஆறு சுவை (இனிப்பு, கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு), **உண்டி** - உணவு, **அளிப்பது** - கொடுப்பது, **தரணி** - உலகம், **நற்றுணை** - நல்ல துணை, **தருக்கள்** - மரங்கள், **மதுரம்** - இனிமை, **வானம்** - (இங்கு மழை என்பது பொருள்), **மாநிலம்** - பெரிய உலகம், **தாழ்வில்லாத** - குறைவில்லாத, **தருமம்** - அறச்செயல்கள், **தழைத்து** - செழித்து, **தானம்** - கொடை கொடுத்தல், **தவம்** - மனத்தைக் கட்டுப்படுத்தல்.

## சொற்களைப் பிரித்தறிதல்

| | | | | |
|---|---|---|---|---|
| மரஞ்செடி | - | மரம் | + | செடி |
| அறஞ்செயல் | - | அறம் | + | செயல் |
| நற்றுணை | - | நல் | + | துணை |
| மதுரக்கனிகள் | - | மதுரம் | + | கனிகள் |
| தாழ்வில்லாத | - | தாழ்வு | + | இல்லாத |

## கிரகித்தல் பயிற்சி

(அ) 1. பின்வரும் சொற்களுக்குப் பொருள் கூறுக
உண்டி, தரணி, தருக்கள், மதுரம், மண்ணில், வானம்

2. பிரித்து எழுதுக
நற்றுணை, தாழ்வில்லாத, அறஞ்செயல்

(ஆ) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.
1. எதனை உணர்வது அறிவு?
2. எதனை உணர்வது சிறப்பு?
3. கவிஞர் எவை வாழ்கவென வாழ்த்துகிறார்?

(இ) பாடலில் கூறப்பட்டுள்ளவாறு மரஞ்செடி கொடிகளால் மக்கள் பெறும் நன்மைகளைத் தொகுத்து எழுதுக.

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

1. 'உலகம்' என்னும் பொருள் தரும் சொல்லை இப்பாடலில் இருந்து எடுத்து எழுதுக.

2. கீழ்க்காணும் தொடர்களை விளக்கி எழுதுக
எடுத்துக்காட்டுக்கள்

★அறுசுவை - இனிப்பு, கசப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு
★முத்தமிழ் - இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்

விளக்கி எழுத வேண்டிய தொடர்கள்
1. இருதிணை 2. மூவேந்தர் 3. முக்கொடி 4. நானிலம்